| Headline | No Logging Activities In Lentang Forest Reserve - Pahang Forestry | | |
|---|---|---|---|
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 13 Nov 2015 | Language | Tamil |
| Circulation | 138,333 | Readership | 415,000 |
| Section | News | Page No | 16 |
| ArticleSize | 275 cm² | Journalist | NULL |
| PR Value | RM 4,800 | | |
| | | | |



# வெட்டுமர நடவடிக்கை எதுவும் இல்லை

குவாந்தான், நவ. 13-

கோலாலம்பூர் - காராக் நெடுஞ்சாலையில் சகதி வெள்ளப் பெருக்கிற்கு லெந்தாங் காட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்படும் வெட்டு மர நடவடிக்கைகள் தான் காரணம் என்று கூறப்படுவது தவறாகுமென்று பகாங் காட்டுத் துறை நேற்று தெரிவித்தது.

அப்பகுதியில் வெட்டு மர நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று அத்துறையின் இயக்குநர் டத்தோ முகமட் பைஸ் கமாருசமான் தெரிவித்தார். அதோடு லெந்தோங்கிலிருந்து நெகிரி செம்பிலான் லெங்கெங்கிற்கான தெனாகா நேஷனல் திட்டமும் (டிஎன்பி) மேற்கொள்ளப்படவில்லை என்று அவர் சொன்னார். டிஎன்பி திட்டம் தடைப்பட்டுள்ளது. அப்பகுதியில் கடந்த ஆறு மாதங்களாக வெட்டு மர நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது டிஎன்பி வழியை அமைக்கும் திட்டம் குறித்து பேச்சு நடத்தப்படுகிறது.

அதில் கிராம மக்களும் கலந்து கொள்வார்கள். டிஎன்பி திட்டம் அடுத்த ஆண்டு முற்பகுதியில் முடிவடைய வேண்டும். ஆனால் சில பிரச்சினைகளால் அத்திட்டம் தடைப்பட்டுள்ளது.

கலந்தாலோசித்த பின்னர் அத்திட்டம் மீண்டும் தொடக்கப்படும். எனினும் இதுவரை எந்தவொரு மரங்களும் வெட்டப்படவில்லை என்று அவர் குவாந்தானில் நிருபர்களிடம் தெரிவித்தார்.



டிஎன்பி திட்டத்திற்காக மேற்கொள்ளப்படும் வெட்டு மரச் செயல்கள் தான் இந்த பாதிப்புக்கு காரணமென்று அரசாங்கச் சார்பற்ற அமைப்பு ஒன்று குற்றஞ்சாட்டியது.

சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட மரங்கள், கிளைகள் குறித்து கருத்துரைத்த முகமட் பைஸ் அவை வெட்டு மரங்கள் அல்ல என்று கூறினார். வெட்டு மரங்களாக இருந்தால் அவை வெட்டப்பட்டிருக்கும் என்று விளக்கம் அளித்தார்.

லிபுர் லெந்தாங் காட்டுப் பகுதியில் வெட்டு மர நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

பலத்த மழை பெய்ததால் அம்மரங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கும். வெள்ளப் பெருக்கினால் மலைச் சரிவுகளில் மரங்கள் அடித்துச் செல்லப்பட்டிருக்குமென்று அவர் சொன்னார்.

எனினும் ஆய்வை நடத்திய பின்னர் தான் எதனையும் உறுதியாக கூற முடியும். வெறுமனே ஆரூடங்கள் கூற முடியாது. பல அம்சங்களை கவனத்தில் கொள்ள வேண்டியது. அதிகாரிகள் அங்கு அனுப்பப்பட்டுள்ளனர். அவர்களது அறிக்கைக்கு காட்டு வளத் துறை காத்திருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

Powered by: iSENTIA